உ

ஓம் முருகா

காரைநகர், தோப்புக்காடு

# ஸ்ரீ சுப்பிரமணிய கோவில்

# திருவூஞ்சல்

ஆக்கியோன்:

புலவர்மணி

வட்டுக்கோட்டையூர், பண்டிதர் க.மயில்வாகனனார்

## காப்பு

### விருத்தம்

சீர்மேவு கழனிகளுங் கடலு மோங்கிச்
செல்வமுயர் காரைநகர்த் தோப்புக் காட்டில்
பார்மேவ அருள்சுரக்குஞ் சுப்ர மண்ய
பகவன்மேல் திருவூஞ்சல் இனிது பாட
ஏர்மேவு நல்லன்பர் இதயக் கானில்
இனிதுலவிப் பிளிறிவருங் களிறெம் முன்னோன்
கார்மேவும் ஐங்கரத்தன் ஒற்றைக் கொம்பன்
கணபதியின் சரணமலர் காப்பதாமே. 1.

## நூல்

திருமலிநல் வாழ்வென்னுந் தூணின் மீதே
திண்மை யெனும் வைராக்ய விட்டங்கொண்டு
பொருவரிய அன்பென்னுங் கயிறு சேர்த்திப்
புன்னெஞ்சைப் பலகையெனப் பண்ணி வைத்தேம்
மருமலியுஞ் சோலைசெறி, தோப்புக் காட்டில்
மனமுவந்து குடிபுகுந்த கடம்ப மார்பா!
குருமணியே! செவ்வேளே! ஆடீரூஞ்சல்
கோதையரோ டினிதமர்ந்தே ஆடீரூஞ்சல். 2.

விண்ணவர்கள் மருங்கமர்ந்து வாழ்த்தெ டுப்ப
விதிமுறையின் வேதியர்கள் சாமம் பாட
மண்ணவர்கள் திருவருளை வழங்கென் றேத்த
மாதவர்கள் மருங்கிருந்து நிட்டை கூட
நண்ணுபுகழ்க் காரைநகர்த் தோப்புக் காட்டில்
நலஞ்சிறப்பக் குடிபுகுந்த திருவார் மார்பா!
பண்ணமையுஞ் சுப்ரமண்ய ஆடீரூஞ்சல்
பணி மொழியார் இருவரொடும் ஆடீரூஞ்சல். 3.

நீலநிறக் கடல்நடுவில் நிமிரும் வெய்யோன்
நினையொவ்வான் புறவிருளை நீக்கி னுந்தான்
கோலமயில் மிசைவந்தே அடியர் துன்பங்
குமராநீ தீர்ப்பதெல்லாங் கண்டோ மைய!
வேலவரே நாகமுத்து கந்தர் அன்பில்
விருப்புற்றே வந்தமர்ந்தீர் தோப்புக் காட்டில்
கோலமுகம் ஆறுடையீர் ஆடீரூஞ்சல்
கோதையர்கள் இருவரொடும் ஆடீரூஞ்சல். 4.

பணியுதவு மணிகொண்டே அழகு பண்ணி
பால்நிலவின் குளிர்முத்தம் பதித்து மேலும்
திணிசெம்பொன் பட்டணிந்து விளங்கும் பீடம்
செழுங்கதிர்கள் ஒருகோடி சேர்ந்தால் ஒப்ப
மணிமயிலூர் செவ்வேள்நீ இருத்தல் கண்டோம்
மாண்புமலி காரைநகர்த் தோப்புக் காடீர்
அணிகுலவு தோளுடையீர் ஆடீரூஞ்சல்
அரிவையர்கள் இருவரொடும் ஆடீரூஞ்சல். 5.

விஞ்சிவரு காதலொடும் உயிர்கள் தம்மை
வியன்கருணைத் தங்கரத்தால் ஆட்டி வைப்பீர்
தஞ்சமென நுமையடைந்தோம் சுப்ர மண்ய!
தமிழ்க் குருவே! தனித்துணையே தண்டபாணீ!
வெஞ்சமர்செய் அவுணர்க்கும் கருணை செய்தீர்
வித்தகரே தற்பரரே ஆடீரூஞ்சல்
கஞ்சமலர்ப் பொய்கைசெறி தோப்புக் காடீர்
காரணரே அழகியரோ டாடீரூஞ்சல். 6.

அவுணர்கள் புன்செயலால் அலந்தார் தேவர்
அவர்துயரந் தீர்த்தனைநீ முன்ப முன்நாள்
பலவினையால் மிடிச்சேற்றில் உழந்தோம் கந்தா
பன்னிருகை படைத்துடையாய் விரைந்தே ஆள்வாய்
சிவநெறிசேர் நல்லோர் வாழ் தோப்புக் காட்டில்
சேர்ந்தமர்ந்து வாழ்வருள்வீர் ஆடீரூஞ்சல்
தவமுதல்வா வேடர்கள்கோன் பரவுஞ் செல்வா
தையலர்கள் இருவரொடும் ஆடீரூஞ்சல் 7.

மின்னாரும் வைரமணி முடிகள் ஆட
விளங்குமுத்த நிரையெல்லாம் மிடைந்தே யாடப்
பொன்னாருங் குண்டலங்கள் பொலிவோ டாடப்
புயத்திலணி வலயங்கள் பொம்மென் றாட
கொன்னாருங் கழலொலிப்பக் கோழி ஓங்கிக்
குலவுகொடி எழுந்தாடத் தோப்புக் காடாள்
மன்னவரே! நெடுவேளே! ஆடீரூஞ்சல்
மங்கைமார் இருவரொடும் ஆடீரூஞ்சல். 8.

மணிமயில்மேல் நடமிடுவீர் ஆடீரூஞ்சல்
மாண்புடையார் நெஞ்சுறைவீர் ஆடீரூஞ்சல்
அணிகுலவு தனிவேலீர் ஆடீரூஞ்சல்
ஆறுபடை வீடுடையீர் அடீரூஞ்சல்
பணியினங்கள் விளக்கேந்தும் தோப்புக் காடாள்
பண்ணவரே! அறுமுகரே! ஆடீரூஞ்சல்
பிணிதொடரா வகையருள்வீர் ஆடீரூஞ்சல்
பெண்கொடியார் இருவரொடும் ஆடீரூஞ்சல். 9.

உருகிநினைந் தெழுமடியார் நெஞ்சிருப்பீர்
உத்தமர்கள் செய்கையிலே கலந்திருப்பீர்
பருகுதமிழ்ப் பாடலெலாம் படிந்து நிற்பீர்
பயன்குலவு மலைகடொறும் ஆடல் கொண்டீர்
அருகுதொறும் கலம்புகுந்தே பண்டம் வீச
அருவளஞ்சேர் தோப்புக்கா டிடமாய்க் கொண்டீர்
மருவுதிரு வேற்படையீர் ஆடீரூஞ்சல்
மயில்நிகர்மென் சாயலரோ டாடீரூஞ்சல் 10.

## வாழி

துங்கமலி சிவம்வாழி தமிழும் வாழி
தொன்மையவாம் மறைவாழி மறையும் வாழி
பங்கமிலா அறம்வளர்க்கும் முனைவோர் வாழி
படியாளும் தலைவரறம் பயின்று வாழி
பொங்குமருட் குமரன்வாழ் தோப்புக் காட்டில்
புகுந்துபணிந் திடுமன்பர் நாளும் வாழி
எங்குமுள உயிரினங்கள் வாழி வாழி
இசைமிகு பரிபாலனசபை இனிது வாழி 11.

முற்றும்.

* * *